# முருகு

வெளியீடு: கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டம்.

அன்பளிப்பு: ரூபா 4-00 — 1984 மே. ஆகஸ்ட்.

## ★ ஆண்டு மலர் ★

உள்ளே ... ... ...


கொக்கூர் இழான்
செ. குணரத்தினம்
அ. கௌரிதாஸன்
பாலையூற்று அஷ்ரபா
ஞானக் கண்ணன்
கமருன் நிஸா றிஸாட்
கல்முனை ஆதம்
பாலமுனை பாறுக்
சித்தி ஜெரீனுகரீம்
இப்னு அஸூமத்
முருகு
என். ஏ. திரன்
நிலா தமிழின் தாஸன்
மேமன்கவி
கே. நாகராஜா
எச். ஏ. அஸீஸ்
திக்குவல்லை ஸப்வான்
மஸீதா ஹம்ஸா
மருதூரான்
அன்பிதயன் ஸிறுந்
நி. இராஜம் புஷ்பவனம்
நத்பிட்டிமுனை பளீல்
மஷூறு ஏ. மஜீட்
ஏ. எம். எம். நஸீர்
அறநிலா
முகம்மது அலிக்கான்
தம்பிலுவில் கலை லங்கா
எம் ஆர் சுமன்
நஸீறு அன்ஸார்
மருதூர்க் கனி
இக்பால்கான்
மருதூர் ஜமால்தீன்
பாரிஹா
தர்ஹாநகர் ஷாரு
ஏ. ஜி. ஏ. ஜாபீர்


புதிய உதயத்தின் புதுமைக் குரல்கள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from:*

# GROWN

# GROWN STORES

*89/4, BUS STAND,*

*KALMUNAI.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது செல்லும் வழியே...

இலக்கியத் தூதுதான் தூதின்
இலட்சியத் தூது
இதில்
இளைய கவிகள் இலக்கியம் செய்யும்
மரபு மேகங்கள் கவிமழை பெய்யும்
தூது செல்லும் வழியெங்கும்
கவி மணம்தான் கமழும்
புதுக் கவிஞரின் கவிவேல்கள் கூரானவை
மரபுக் கோட்டையும் பலமானதே
பிறகென்ன?
கவிதைதான் நமது மூச்சு...பேச்சு எல்லாமே!
நமது கவிதைகள்
கர்வங்கள் கண்டவிடத்து
மண்டையில் சம்மட்டியாய் இறங்கும்
மென்மை உணர்வுகளுக்கு
பஞ்சாய் ஒத்தடமும் தரும்
நமது கவிதைகள்
விண்ணையும் எட்டும் மண்ணையும் ஊடுருவும்
ஆழியும் விண்வெளியும், அண்ட கோளங்களும்
நம் கவிதைக்கு முன் சிறிதாகும்
கம்பனும் வள்ளுவனும் உமறும் நமது பாட்டாளுர்கள்
பாரதியும் அவனின் தாஸனும் நமக்குத் தந்தைமார்
இன்றைய மேத்தாவும், வைரமுத்துவும் சகோதரர்கள்
' நமக்குத் தொழில் கவிதை...'
தூது
மரபுக்கும் புதிதுக்கும் தூது செல்லும் - ஒரு
கவிப் பாலம் அமைக்கும்
இன்னும்
அடிமைத்தளைகளை அறுக்கவும் கவிபாடும்
உரிமைக் குரல்களை உயர்த்தியும் முழங்கும்
தூதின்
இலட்சியப் பயணத்தில்
முதலாம் (வருட) மைல்கல் இது
தூது தொடர வேண்டும்
இன்னும் பல (வருட) மைல்கற்களை
இது தாண்டவும் விரும்புகிறது
அந்தப் புனிதப் பயணத்திற்கு
விமர்சன வேல்களும், கவிக்கேடயங்களும் மட்டுமல்ல
வாசகர்களின் 'பெருந்தனமும்' வேண்டும்
அதனால்
நாளைய இலக்கிய தேசத்தை
காத்திரமாய் கட்டி ஆளப் போகின்ற
கவி ராஜப் புத்திரர்களில் சிலர்
இங்கும் தோன்றுமல்லவா விடுவர்?
அதற்காய்
தூதின் பயணம் தொடரும்
தூதுகள் தொடரும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினமும் தோழர்களும்...

துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்தால்தான்— எங்கள்
தொழிலாளர் துன்பங்கள் தீருமா!
ஒப்பாரி ஓலங்கள் கேட்டால்தான்— நாடு
உரிமைக்குரலையும் கேட்குமா?

சிக்காக்கோ நகரிலே சிந்திய— அந்த
சிவப்பு இரத்தங்கள் போதுமா!
திக்கெட்டும் வாழ்கிற தோழரின்— நெஞ்சம்
தீரமுடன் என்றும் வாழுமா?

நல்லவன் என்றபேர் வாங்கிட— மக்கள்
நாட்டில் இறக்கத்தான் வேண்டுமா!
உள்ளவன் வாரிவழங்கிட— ஏழை
ஓங்கிக் கொடுக்கத்தான் வேண்டுமா?

இரத்தக் களரியில் ஏறித்தான்— மக்கள்
இரந்து கண்ணீர்விட வேண்டுமா!
வருத்தபடுக்கையைக் காட்டித்தான்— அவர்
வயிற்றை நிரப்பிட வேண்டுமா?

தீயில் குளித்து மடிந்தால் தான்— தோழர்
தேவையை நாடு அறியுமா!
தாயை மனைவியை இழந்துதான்— அவர்
தலைமுறை வாழமுடியுமா?

தட்டி உசுப்பாமல் உரிமையை— நாட்டில்
தந்திட யாருமே இல்லையா!
சுட்டுப் பொசுக்காமல் மானுடம்— என்றும்
சுதந்திரமாய் வாழ்வதில்லையா?

✶ செ குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பாத்துக் கால்களின் வரவுக்காக!

எனக்கு வயது இருபத்திநான்கு
காத்திருக்கிறேன்
சப்பாத்துக் கால்களின் வரவுக்காக!

இரவுகளில்
வீட்டினுள்ளே படுத்திருக்கையிலும்
எதிர்பார்த்துக் கொண்டேதானிருக்
[கிறேன்
சப்பாத்துக்கால்களின் வரவை

நான் ஒரு இளைஞன் வயது 24
அவைகளின் வரவுக்கு
இவை போதுமான தகுதிதாம்!
காத்திருக்கிறேன்

எப்போதாவது
அவைகள் வந்து என்னை
மிதித்து ...
துவைத்து
இழுத்துப் போகும் .. நிச்சயமாய்
அப்போது,
என் குடும்பத்தின் கதறலும்
நண்பர்களின் ஊமைச் சோகமும்
வேலி ஒட்டையில் தெரியும்
என் காதலியின்
துடிக்கின்ற துயர விழிகளும் கூட
சக்தியற்றுப் போகும்

காலை, மாலை, மதியம்
செக்கல், இரவு, நிசி,
எக்கணத்திலும்
அவைகள் என்னைத்
தேடி வரல் கூடும்
காத்திருக்கிறேன்
சப்பாத்து கால்களின் வரவுக்காக!

ஹே ...
பிரிந்து விடப்போகின்றவர்களே
உங்களுக்கு
என்னிடம்
தீர்க்கப்படாத கணக்குகள்
ஏதும் இருப்பின்
தீர்த்து விடுங்கள்
நேர காலத்தோடேயே!
ஏனெனில்
விரைவில் .. நானே
தீர்ந்து போய் விடக்கூடும்

எனக்கு வயது இருபத்தி நான்கு
காத்திருக்கிறேன்
சப்பாத்து கால்களின் வரவுக்காக!

★ என். ஏ. தீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணே நீ எங்கு சென்றாய்?

கடலான என் விழியில்
படகான உன் நினைவு
கரைகாண முடியாமல்
காலமும் தரும் கனவு!
மதிமுகம் காட்டி காட்டி
மதிமயங்க வைத்தாயே
கவிதினம் பாடிப்பாடி
காதலை விதைத்தாயே
விதிவந்து நம்மையின்று
சதி செய்து பிரித்ததே
விலகாத சொந்தம் இன்று
அலைமோதித் தவிக்குதே!
சிலையெனச் சொல்லிச்சொல்லி
சிந்தையுள் நிலைத்தாயே
செவ்விதழ் கிள்ளிக்கிள்ளி
செம்பவளம் என்பாயே
கலையாவும் உன் உடலில்
கருப்பெற்று வளர்ந்ததென்றாய்
கண்ணீரை உறவாய்த் தந்து - இன்று
கண்ணே நீ எங்கு சென்றாய்?

தலைமன்னார்துறையூர்
★ கார்மேகம் நந்தா

## தீர்ப்பு

ஓ! பெண்களே,
எப்போது உங்கள்
ஆணவங்கள்
அழிகின்றதோ
அக்கிரமப்பாதைகள்
அகற்றப்படுகின்றதோ
அகங்காரப் பிடிவாதம்
குழிதோண்டிப்
புதைக்கப்படுகின்றதோ
நாகரீகக் கடலில்
பொங்கியெழும்
அநாகரீக அலைகள்
ஓய்கின்றதோ
உங்களின் அறிவற்ற
சுதந்திர ஆசை
முடிச்சுகள் அவிழ்த்து
எறியப்படுகின்றதோ
அந்நாளே உங்களின்
உள்ளத்தில் ஒளி
பெறும் நாள்
எங்களின்
இதயங்கள்
குதூகலிக்கும் நாள்

★ எம். ஐ. ஏ. றஹீம்

---

## என்றனின் காதல் பெற்றாய்!

மாங்கனிக் கன்னம் பெற்றாய்
மதிநிகர் வதனம் பெற்றாய்
கொங்கையாய் மலைகள் பெற்றாய்
குளிர்மலர் மேனி பெற்றாய்
காந்தளாய்க் கரங்கள் பெற்றாய்
கனிவுடை மொழிகள் பெற்றாய்
ஏந்திழை அடக்கம் பெற்றாய்
என்றனின் காதல் பெற்றாய்

அம்பெனும் விழிகள் பெற்றாய்
ஆதாரமாய் கோவை பெற்றாய்
பங்கமில் நாணம் பெற்றாய்
பளிங்கெனும் பற்கள் பெற்றாய்
பாளைசேர் கமுகின் தேகம்
பாரிடை உனதாய்ப் பெற்றாய்
வாழையாய்க் குறங்கு பெற்றாய்
வஞ்சியென் காதல் பெற்றாய்

★ அ. கௌரிதாசன்
1983-10-01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடன் யார்?

பூமா தேவி
தன்
ஆதிச் சேய்களுக்கு
ஒழுக்கமென்ெறாரு
பொக்கிஷமளித்தாள்
அதை
அவளின்
நவீன சந்ததியிடமிருந்து
இன்று
எந்தத் திருடன்
கவர்ந்தெடுத்தான்?

★ ஷாரு, தர்ஹாநகர்

---

# விமோசனம் இல்லையா?

பெண்ணாகப் பிறந்திடவே
பெருந்தவங்கள் புரிந்திட
வேண்டுமென
பாவேந்தன் முரசியற்ற
பிறந்து விட்டோம்
பாவிகள் நாம்
வஞ்சர்கள் பலர் செய்யும்
வஞ்சனையால் வாழ்விழந்து
வாழ்வெல்லாம்
கண்ணீர் வடிக்கின்றோம்
பாவிகள் நாம்
சீதன மென்னும்
சீர் வரிசை வேண்டுமென
சித்தம் கலங்கிய
பித்தர்களால் வாழ்விழந்து
பாவிகளாய் வாடுகிறோம்
பாவேந்தன் அவனிருந்தால்
பாவிகள் எமக்கின்று
புதுவாழ்வு மலர்ந்திருக்கும்

★ பாரிஹா, தர்ஹாநகர்

# அதிர்ஷ்டசாலிகள்

நீங்கள்
மாட மாளிகையின்
மொட்டை மாடியில்
''மொட்''டாக இருந்து கொண்டு
கற்பனையில்
கனிந்துபோய் .....
அண்ணாந்து பார்ப்பது
அந்த ஒரு நிலவைத்தானே?
நாங்களோ
செத்தைக் குடிசையின்
ஓட்டைக் கூரையூடே
எறிக்கின்ற ஒளியினால்
தெறிக்கின்ற விம்பங்களால்
தேயாத நிறைமதிகளை
எண்ணிக்கையின்றி ரசிக்கின்றோம்
இதில்
அதிர்ஷ்ட சாலிகள்
நாங்களன்றோ!

★ செல்வி மஸாரூ ஏ. மஜீட்

---

# பிரிவு

உலாத் தென்றல்
வீசும் நேரத்திலே
குளிர் நிலவின்
வடிவம் வந்தது போல்
தேவி உந்தன் திருமுகமே
தினமும் என்னை
வாட்டுதம்மா
மின்னல் தோன்றி
மறைந்தது போல்
என் நினைவை
நீயும் மறந்ததனால்
நித்தம் நெஞ்சு சோர்ந்ததெலாம்
இன்னுமா
உனக்கு எட்டவில்லை

★ ஏ. ஜி. ஏ. ஜாபீர்
சாய்ந்தமருது—3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவளுக்காக...!

அந்த
ஜோடிப் புறக்களை
கண்டு - ஏன்
கண்ணீர் வடிக்கிறாய்?
கற்பனை விமானங்கள்
சுக்கு நூறாய்
வெடித்து
மனவெளியில்
வீழ்ந்ததுவா......?
அன்று
உன் நேய ராச்சியம்
செழித்ததிற்காய்
சந்தோஷ கானம்
இசைத்தாய்
இன்று - நீ
முகாரியையே
மோகன மாக்கி விட்டாய்
நம்பிக்கை ஜலக்ரீடையில்
சம்பிரதாய சடங்குகளை
மறந்து விட்டு
சருகாகி நிற்கும்
உன்
மேனியின் வாசனை
இழந்த பின்பும்
உனக்காக அனுதாபிக்க
என்னால் மட்டுமே
முடியும்!
இந்த உலகத்தால் ?

★ அன்பிதயன் ஸிருஜ்

# உச்சக்கட்டம்

அரக்கத் தளத்தை
உடைத் தெறிய
உரத்துப் பேசும்
வீரர்கள் சிலரும்
அரக்கராய்
மாறும்
காலகட்டமே
அவர்களாட்சியின்
உச்சக்கட்டம்

★நி இராஜம்புஷ்பவனம்

# நிலைமை

மனிதனைத்
''தலைவீக்கம்''
ஓட்டுகிறது !
வீட்டைப்
'பொருள்வீக்கம்'
நாட்டுகிறது !
நாட்டைப்
'பணவீக்கம்'
ஆட்டுகிறது !
உலகை
'ஜனவீக்கம்'
வீழ்த்துகிறது !

★ ந. பிட்டிமுனைபளீல்

...பொதுவாக எனக்கு நான் இதுவரை படைத்துவந்த எல்லாப் படைப்புகளுமே திருப்தி தருவதில்லை என்ற நிலையிலும் பொதுவாக எனக்கு என் கவிதைகள் இந்தத் திருப்தியின்மையை அதிகமாகவே தந்திருக்கின்றன என்றே சொல்லவேண்டும்.

-- நகுலன் (மூன்று கவிதைகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலம்

## கொஞ்சம் விச்ராந்தியாய் இரு!

நண்ப
என்று தடைபெறும்
நீ சதா எதிர்பார்த்து
ஆயத்தங் கூட்டி இயங்கும்
அம் மாபெரும் விசாரணை?

நண்ப
எப்போதும் உனக்கு
காரியமாற்ற ஒரு சாட்சி
சிந்திக்கக் காகிதம்
பேச ஒரு ஒலிப்பதிவுக் கருவி

பரிசுத்தம் பேருண்மையை
முடிவில் கடைத்தெடுக்கும்
மத்து எங்குள்ளது?

மருத்துவச் சான்று பெற்று
பின் இருமுதல்
எப்போதும் சாத்தியமா?

கொஞ்சம் இருமு
குற்றமில்லை
கொஞ்சம் தனித்திருந்து அழு
குற்றமில்லை.

★ பசுவய்யா

## ஒருகோழையின் முன்னிரவுப் பாடல்!

வாருங்கள் நண்பர்களே
தூங்கப் போகலாம்
வெடவெடத்தால் போர்வைக்குள்ளே
முடங்கிக் கொள்ளலாம்.
வாருங்கள் வாய்முடிப்
பேச்சடங்கலாம்
விழிதிறந்தால் கண்கள் கூசும்
இருளில் புதையலாம்.

விடியும் போது விடியட்டும்
கவலை மறக்கலாம்
விழித்திருந்தால் விவகாரப்
பேய்கள் தோன்றலாம்
விடியும் போது நிச்சயமாய்
விடிவு தோன்றலாம்.
விடிந்த பின்னே விழிந்தெழுந்து
வெயிலில் காயலாம்.

விடிவைப்பற்றிப் பிதற்றுபவர்
பிதற்றிப் போகட்டும்
விடியல் கீதம் பாடுபவர்
புலம்பிப் போகட்டும்
விடியும்வரை விழித்திருப்போர்
தொண தொணக்கட்டும்
விடியும் வரை நம் விழிகள்
ஓய்வெடுக்கட்டும்.

கதவு ஜன்னல் சாத்திவிடு
குளி ரடிக்குதே
காவல் நாயை அவிழ்த்து விடு
குலைத்து தொலைக்குதே
கம்பளியை இழுத்து விடு
கதகதப் போடு
காலமகள் சிரிக்கின்றாள்
கண்களை மூடு

வாருங்கள் நண்பர்களே
தூங்கப் போகலாம்
விடிந்த பின்னே விழி திறந்து
வெயிலில் காயலாம்.

★ புவியரசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலம் பாலம் பாலம்

## இன்று காலை கண்டவை

படி தாண்டியதும்
மனதில் தான்
பரப்பு விரிக்கும் மைதானம்
சிராக உவமி
வட்டமிடும் விமானம்
அடி மடி அதிர
இரையில் குறியாய்
தரைமோந்து ஓடும் பன்றி

தகரச்சல்லடையைத்
தூக்க முடியாமல் தூக்கி
குப்பை கொட்டச் செல்லும்
தூக்கம் கலையாச் சிறுமி
பச்சைத் தழைகளின் பின்னிருந்து
மூர்க்கமாய் மேடேறும் எருமை

முட்டாய் குதப்பி
இரட்டையாய் நடக்கும்
கறுப்பு அம்மணக்குழந்தை
வால் சடைபூராணுய் நெளிந்து ஆட
திருப்பத்தில் கவனம் இடர
திடீரெனத் தோன்றும் கறுப்பு நாய்

பிளந்து போட்ட மரத்துண்டு
பச்சை வாடை வீச
அருகமர்ந்து
பீடி புகைத்து
மாற்றுக் குரலில்
ராகம் இழுக்கும் விறகு வெட்டி

★ நாரணே ஜெயராமென்

## தொடக்கம்

தொடக்கத்தைப் பற்றி
எனக்கு ஒரு
சந்தேகம் மட்டும்

எத்தனை தலைகள்
எங்கும் எங்கும்
எத்தனை முகங்கள்
சிறுசாய்ப் பெரிசாய்க்
கால்கள் முளைத்து
கைகள் வளர்த்து
வளருது வளருது
மனித மரங்க்ள்.

அன்றைக்கு ஒரு நாள்
ஆரம்பித்து வைத்தானே ஆதாம்
அவனுக்கு
ஏவாள் கொடுத்த
இனிய ஆப்பிளில்
இத்தனை விதைகளா?

★ சிற்பி.

---

நன்றிகள்!

பாலத்துக்காக எடுத்தாண்ட
கவிதைகள் இடம் பெற்றுள்ள
நடுநிசிநாய்கள் இதுதான் வேலி
மிறிய சிலை ஆகிய கவிதைத்
தொகுதி ஆசிரியர்களுக்கும்
கவிஞர்களுக்கும் வெளியிட்ட
பதிப்பகத்தினருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்
## வாழ்க்கை வட்டம்

பூபாள நேரம்
என் விழிப்பறவைகள்
சிறகடிக்கும்
அழிந்த ஓவியமாய்
சில உருவங்கள்
வாய்பிளக்கப்
படுத்துக் கிடக்கும்.
எங்கோ
ஒரு தெருவின்
ஊளைராகம்
காதுகளை முத்தமிட
பாதி இற்ற சயரில்
பனி நுளம்பு
ரத்தம் குடிக்கும்.
விளைந்த மதிமகளை
மேகமவன்
ஆலிங்கனம் செய்யும் போது
வாழ்க்கைக்கும்.
வயிற்றுக்கும்
வழி சமைக்கும் அந்த
விடிவெள்ளியை
என் கண்கள் தேடும்.
வயிற்றுக் கச்சேரியில்
பசி நாயனம் இசைக்க
குறைபீடி வாய் ஏறும்.
இருள் வில்லை
சூரியமாடு மேய்ந்து
விடியல் சாணகத்தை
பிரசவிக்கும் போது அந்த
மடத்தை விட்டு
என் கால்கள்
செல்வந்த முகவரிகளைத்தேடும்
யாசகத்துக்காய்

★ ஏ. எம். எம். நவுீர்

## மௌனச் சடலங்கள்!

மகிழ்ச்சி மேகம்
நீண்டகாலம்...
இதன் இடையில்
வறுமை வெளி
அதன் நடுவில்.
மகிழ்ச்சி காணும்
கனவுக் காற்றுடிகளே
நாங்கள்,
இதனால்தான்;
விழிப்புயலில்
பந்தாடப்படுகின்றோம்!
அதனால்தான்
உலக வெளியில்
உறங்குகின்ற
மௌனச்சடலங்கள்!

★ எம். எம். எம். நகிபு

## மறந்திடு விருப்பமின்றேல்....

இறந்தபின் அன்பே என்பால்
இரங்கி நீ அழவும் வேண்டா
சிறுநிழல் மரமோ ரோஜா
செடிகளோ நடவும் வேண்டா
நறும்பெயல் நீரும் பனியும்
நனைந்தபுல் முளைத்தி டட்டும்
மறந்திடு விருப்ப மின்றேல்
மனத்தில்வை விருப்ப முண்டேல்.

மரநிழல் காணல் எங்கள்
மழையினில் உணரல் எங்கன்
இரவிசைப் புள்துன் புறுங்கால்
எழுப்பிடும் ஒலியும் கேளா
இரு பொழு துறழும் மைமல்
வேளையென் நினைவு உள்ளத்
தொருமுறை முகிழ்ப்பின் விரும்பின்
தொழுதிடு இன்றேல் மறப்பாய்.

★ கொக்கூர்கிழான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப்பில்லாச் சொந்தங்கள்

ஓ! என் சொந்தங்களே!
உங்கள் உறவு
இப்போது புரிகிறது.
வாழ்க்கை ஏணியில்
வழுக்கி விழாமல்
நடுங்கும் கரங்களால்
இறுக்கமாய்ப் பற்றிய
அந்தநாட்களில்
என்னை உங்கள் கண்கள்
ஏறெடுத்தும் பார்க்கவில்லை.
இலையுதிர் காலம்
இறந்து விட்டாலும்,
என் வாழ்க்கைப் புத்தகத்தைப்
புரட்டிப் பார்க்கின்றேன்.
ஈரமில்லா
உங்கள் நெஞ்சங்களின்
ஏளன வார்த்தைகள் தான்
அங்கே நிறைந்துள்ளன.
இப்போது என் வாழ்வில்
இளவேனில் வந்துவிட்டதால்,
நான் வாழ்க்கை ஏணியின்
உயரத்தில் நிற்பதால்,
என்னை நீங்கள் தேடிவருகிறீர்கள்,
உப்பில்லா உங்கள் சொந்தங்கள்
என் நெஞ்சத் திரையில்
பெருங் கிறலை உண்டுபண்ணியதால்
உங்கள் சொந்தங்கள்
உள்ளத்தில்
என்றோ அழிந்துவிட்டன.
எனது இறந்தநாட்கள்
நிச்சயமாய் நானே
உங்கள் வாழ்விலும்
வந்தே தீரும்!

★ பாலையூற்று அஷ்ரபா
1984-01-17

## "ஓவர் லோட்"

அனலாய் உடல்கள்
மோதியபடி -
வியர்வை ஆடைகள்
ஆடைகளையே போர்த்தும்!

கால் தேடும் வேளையில்
செருப்புத் துண்டாக
மிதிபட்டு -
வேதனை மிகுதிகள் வெறுப்பூட்டும்!

'இஸ்ஸரா பஹினவாக்கள்'
இன்னும் -
பொறுமை நோயைச்
சோதனை செய்யும்;

பிடிபடும் அச்சத்தில்
மிதிபலகை உடம்பு தட்டி
பெட்டிக்குள் -
அடைபட்டு நெளியும்
பாம்புகளாக -

தலை குனிந்தபடி இருக்கப்
படிப்பிக்கும் -
பள்ளிக் கூட
நினைப்புகள் வேறு!

வேகும் வெக்கையில்
சிகரட் பிடித்து
புகை துப்பும் வாய்களின்
உஷ்ணம் வேறு!

நின்று; வெந்து,
நொந்து, மடிந்து -
நாமே,
வாகனம் போன
பாதைபோல!

★ இப்னு அஸுமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலும் வெள்ளமும்

வானம்,
கண்ணீர் மழையினைப்
பொழிந்தது,
இடையிடை ''கரகர'' இருமல்,
முழக்கமாய்க் கேட்டது'

பாடுபட்டு,
பட்டினி கிடந்து
வளர்த்த பயிர்களை
வெள்ளம் வந்து
முக்காடிட்டது

தாணிக் கோணி
தலைகளைக் கவிழ்த்த
பயிர்களும்
முக்காட்டிற்குள் மூர்ச்சையாகின

கிழக்கில் ,
காற்றொரு ஆட்டம்
ஆடிய பின்னர்
மழை ஒரு ''பைலா''
ஆடிப் பார்த்தது!

எத்தனை பக்கப் பயமுறுத்தல்கள் ?

மழை ஒரு ஆட்டம்
ஆடிடும் முன்னர்
''வயலும் மலையும்
எமக்கே'' என்று
வந்ததொரு கோஷ்டி
ஆடிச் சென்றது
''கண்டிய நடனம்''

கடலும் ஒரு முறை
கனைத்துப் பார்த்தது
அமுக்கம் தொண்டையை
அடைத்துக் கொண்டதாம்!

மழை ஒரு பைலா
ஆடிப் பார்த்தது

பொத்தல் பொத்தலாய்
இருந்த கூரைகள்
'பொத்துப் பொத்'தென
விழுந்து போயின

கூரையைப் பிய்த்தே
கொடுப்பவன் கொடுத்தான்
குடிசைச் சுவர்கள்
கரைந்து போயின

''வெள்ளம் நிவாரணம்''
வானொலி அலறல்கள்
விரைகிற ஜீப்புகள்
பெரியவர் தலைவர்கள்

மழை ஒரு பைலா
ஆடிப் பார்த்தது
மன்னவர் பெரியவர்
அனைவரும் ஆடினர்

கூரையைப் பிய்த்தே
கொடுப்பவன் கொடுத்தான்
நிறைகிற இடத்தில்
நிவாரணம் நிறைந்தது!

நாலு நாள் இன்றவன்
நடுத் தெருவில்தான்
மழை ,
வெள்ளமாய் வந்து
பள்ளத்தை தாக்கவும்
நிவாரண மலைகள்
மூட்டையாய் சேர்ந்து
மேட்டையே நோக்கின

கிழக்கில்
காற்றொரு ஆட்டம்
ஆடிய பின்னர்
மழை ஒரு 'பைலா'
ஆடிப் பார்த்தது!

★ பாலமுனை பாறூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய திசைகளை நோக்கி'...

ஓ மதுவே!
இமைத் தொட்டியில்
உறக்க மணிகள்
கூட என்னை
மௌனியாக்கும்
உன்னை
சுமந்திருக்கும்
மதுவின் கதவுகளைத்
திறவாதிருந்தால்
தினம்... தினம்
மனநீர்த் தேக்கத்தின்
அணை உடைப்பு
என்னவளின் விழிக்குள்
பெருக்கெடுத்து...
கரைந்தோடுவதை
நீ
அறிய மாட்டாய்
ஒரு வேளை
உன் குடியிருப்புக்கள்
இங்கே தான்
சங்கமிக்கின்றதோ?
என்
தாகத்தின் எரிச்சல்கள்
உன்னைத் தொடர்வதால்
எந்தக் குற்றத்திற்காக
பிகாஸோவின் தூரிகையை
என் பிள்ளைகளின்
எலும்புகள்...
கடன் வாங்கும்?
ராப்போர்வையில்
உன் முகம் தேடித்
தேகம் முழுதும் பல
சந்தேகம்
நரம்புக் கம்பிகள்
இயக்க முட்களை
நகர்த்தி வைத்து
எண்ணப் பறவை
என்னை அஃறிணையாக்கி
வேடிக்கை பார்க்கும்
உன் மேல்
மையல் கொண்டு
பகுத்தறிவின் சிதறல்கள்...
நிம்மதி ராஜ்யத்தின்
சுதந்திரத்தைப் பறிக்கும்
உன் உறவின்
இரைச்சல் சத்தங்கள்
பயமுறுத்தியே...
என்னைக் கொல்லும்
கை விலங்குப் பூட்டியவளே
உன்னால்
இரையாகி...
வெகு தூரம்
நடந்து விட்டேன்
சிந்தனைக் கருவறையில
மதுவின் தாய்
பெற்றெடுத்த
மன இருட்டைப்
பாதுகாக்க
இனி மேல் நீ
''ரிடையர்,, கவசத்தைக்
பூணும் வரை
ஞான மாத்திரைகள்
உன்
சரித்திரம் எழுதும்

★ மெஹறுன் நிஷா றிஸாட்

---

**ஒரு எழுத்தாளன் தன் எழுத்துக்கு வேறு எதையும் விடச் கட்டுப்பட்டவன். அவனுக்கு அவ்வளவாகத் திருப்தி தராத படைப்புக்கள் கூட அவன் வளர்ச்சிக்கு உதவும்.**

**- நகுலன்**

**(மூன்று கவிதைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது இதழ்கள்

## சின்னப் பார்வைக்குள்....

★ மேமன்கவி

### முன்னுரை

பிரவாகத் துடிப்பாக இன்றைய ஈழத்து இலக்கியப் பரப்பில் நிலவிவரும் சிறு சஞ்சிகை சூழலில் 'சிறு' சஞ்சிகையாக வெளிவந்துள்ளது 'தூது' கவிதை இதழாக தெரிவதால், இதன் வருகையின் காரணம ஈழத்து கலைப்பரப்பில் நிலவிவரும் யாரும் கவிதை எழுதலாம் என்ற ஜீரணமற்ற சூழ்நிலை காரணமா? அல்லது எல்லோரும் கவிதை எழுதுகிறார்கள் என்ற காரணமா என்பதை 'தூது' இதழின் பக்கங்கள் எம்மை தீர்மானிக்க வைக்கும்.

1. தூது கவிதைகள்

'தூது' மூன்று இதழ்களிலும் மொத்தமாக நாற்பது படைப்புகள் கவிதை என்ற வெளிப்பாட்டில் வெளியாகிவுள்ளன வெளியாகிவுள்ள ஐந்து படைப்புகள் மட்டுமே கவிதைகளாக வெளிவந்துள்ளன
அந்த ஐந்து கவிதைகள் பின்வருமாறு

(அ) தஸீமு வாபீரின் மானுடப் பயணம் (1)

(ஆ) நிலாதமிழின் தாசனின் 'மாற்றம் தேவை' (2)

(இ) கல்முனைக் கலீல் மொழிபெயர்த்த
சலீம் சப்ராணின் 'முடிவுறுக் கவிதை' (2)

(ஈ) பாவலர் பஸீல் காரியப்பரின் தாய்மை மலர (3)

(உ) பாத்திமா மைந்தனின் 'சுற்றம் சூழ வந்திருந்து' (3)

ஆகிய படைப்புகள் கவிதைகளாக வெளிப்பட மற்ற படைப்புகள் கவிதையாக முயற்சி செய்துவுள்ளன பொதுவாக 'தூது' வெளியீட்டினூடாக பார்க்குமிடத்து ஈழத்து இலக்கிய உலகில் கவிதை எனும் பேரில் வெளிவரும் படைப்புகளில் சில படைப்புகள் மட்டுமே கவிதைகளாக பிரவாகின்றன. இதற்கு அடிப்படை காரணம் மேற்படி கவிதை ஆக்க முயற்சியில் ஈடுபடுவோருக்கு கவிதை பற்றிய தெளிவின்மையே எனலாம், இவர்களில் சில நம்பிக்கை முகங்கள் தென்பட்டாலுங்கூட, இவர்கள் நிறைய தேர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணம் எழும். இக் கருத்து இளம் படைப்பாளிகளின் வளர்ச்சியில் அக்கறையுடன் எழுதப்பட்ட கருத்தேயன்றி இப்படைப்பாளிகள் மீது கோபப்பட்டு எழுதப்பட்டதல்ல என்பதை நினைவில் நிறுத்திக் கொள்வது நல்லது. ஆகவே 'தூது' 3 இதழ்கள் மூலம் 5 கவிதைகளை வெளியீட்டு ஈழத்து கவிதை உலகத்திற்கு தன் பணி செய்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தூது இதழ்களின் 'காதோரம்'

'தூது' முதலாம் இதழின் 'காதோரம், செய்தி தொகுப்பாகவும் பாராட்டும் குறிப்பாகவும் அமைந்ததால் அதைப்பற்றி சொல்வதற்கில்லை. இரண்டாவது இதழில் இடம்பெறவில்லை. என்பது ஒரு குறையே எனக்கூறி 3 வது இதழின் 'காதோரம், வெளிப்படுத்திய கருத்து பாரட்டத்தக்கது. மொத்தமாக 'தூது, வின் காதோரங்கள் சிறப்பாகவே இருக்கின்றன.

## 3. 'தூது' வின் 'பரிமாற்றம்' (தலையங்கங்கள்)

'தூது' இதழ் பரிமாறிய தலையங்கக் குறிப்புகளில் ஒலித்த கருத்து களைப் பற்றி சில குறிப்புகள்.

### (அ) முதலாவது இதழ் பரிமாற்றம்

முதலாவது பரிமாற்றத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்பு கள் நூலுருப் பெற வேண்டும் என்ற கரிசனையுடன் எழுதப்பட்டது. அக் குறிப்பில் அ. ஆ ப. கலாசாலை அதிபர் எஸ். எச். எம். ஜமீல் (பீஏ) அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வரும் ஒரு கருத்து சொல்லப்பட்டுள்ளது' அதாவது சிலர் ஒன்று சேர்ந்து வரையறுக்கப்பட்ட ரீதியிலான வெளியீட்டுப் பணியகம் ஆரம்பிப்பதென்று ஆனல் அண்மையில் ஜமீல் அவர்களுடைய கருத்து செயலுருவம் பெற்ற பொழுதுதான் அது குறுகிய வட்டத்தில் நின்று விட்டது. என அறிந்த பொழுது 'தூது' தனது முதலாவது பரிமா ற்றத்தில் கருத்து அளவிலாவது பரந்த சிந்தனையுடன் சிந்திக்கின்றது. என்று புலப்படுவதோடு, இளைய தலைமுறையினர் என்றும் பரந்த அளவில் சிந்திக்க எத்தனிக்கின்றனர் என்ற சந்தோஷமும் கலந்து 'தூது, ஆசிரியர் குழுவை பாரட்டச் சொல்கிறது.

### (ஆ) இரண்டாவது பரிமாற்றம்

இரண்டாவது இதழில் எழுதப்பட்ட பரிமாற்றம் புதுக்கவிதை பற்றியதாகும் அதில் புதுக்கவிதை மீது அதீதப்பற்று காரணமாக மரவு கவிதையை வெறுப்பது போன்றொரு கருத்து உள் நிலையாக ஒலித்தது. அக் கருத்து ஆக்க பூர்வமானதாக எனக்குப் படவில்லை ஏனெனில் மரவைப் பற்றிய பிரக்ஞையை உதறித்தள்ளி புதுக்கவிதை படைக்க முடியாது. என்பதை புதிய தலைமுறை கவிதைப் படைப்பாளிகள் நினைவில் பதித்துக் கொள்வதே சிறந்தது. அத்தோடு எந்த உருவமானாலும், அதில் நவீனத்துவ மும் சமகால சமூக உனர்ச்சியும், கலையம்சமும் வெளிப்படுகிறது என்றால் அது புதுக்கவிதை ஆகிறது என்பதே எனது கருத்து.

### (இ) மூன்றாவது பரிமாற்றம்

மூன்றாவது பரிமாற்றத்தில் பின்வரும் கருத்துக்கள் தொனித்தன
(அ) ஈழத்தில் விமர்சனத்துறை வளரவில்லை என்பதும்
(ஆ) ஈழத்து விமர்சனத்துறை வளராதலாலும், அது துறை வளரவும் இளைய தலைமுறையினருக்காகவும் போலி விமர்சனங்களுக்காவும் (இதுவரை வராததால்) விமர்சன வழிகாட்டி நூல் ஒன்று நூல் வெளிவர வேண்டும்.

ஆகிய இரு கருத்துக்கள் வெளிப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அ) ஈழத்துவிமர்சனத்துறை வளர்ச்சி

மேற்குறிப்பிட்ட கருத்தை 'தூது' வெளியிட்ட பொழுதுதான் 'தூது' இன்னும் விரிவாக இத்துறைப்பற்றி அறிந்து எழுதியிருக்கலாம் என தோன்றுகிறது. ஏனெனில் ஈழத்து விமர்சனத்துறை தமிழகத்து இலக்கிய விமர்சனத்தின் சில போக்குகளுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்பதை 'தூது' குழுவினர் அறிந்து வைப்பது நல்லது மற்றும் பேராசிரியர் கைலாசபதி, கே. எஸ். சிவகுமாரன் கலாநிதி சிவதம்பி, எம்' ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், வீ. ஆனந்தன் சித்திரலேகா, மௌனகுரு, கலாநிதி சண்முகதாஸ், சபாஜெயராசா, சிவசேகரம் இப்படியாக நீண்ட பட்டியல் இங்கே கொடுக்கலாம் ஆனால் இடவசதி மனங்கொண்டு அதை தவிர்க்கின்றேன்) போன்றோரின் உரைகளையும் நூல்களையும் மல்லிகை, அலை, சமர், போன்ற சஞ்சிகைகளிலும் தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளிலும் எழுதிய கட்டுரைகளை கேட்டும் கற்றறிந்தும் இருந்திருந்தால் ஈழத்து விமர்சனத்துறை வளரவில்லை என்ற கருத்திற்கு 'தூது' குழு வந்திருக்காது.

## (ஆ) விமர்சன வழிகாட்டி நூல்கள்

3 வது பரிமாற்றத்தில் இரண்டாவது கருத்தின் தொனி ஈழத்தில் விமர்சன வழிகாட்டி நூல்கள் வெளிவரவில்லை என்பதே இக்கருத்து மூலமும் 'தூது' வின் தெளிவின்மையே காட்டியது. ஏனெனில் பல விமர்சன வகைகளை சித்தரிக்கும் நூல்களும் சிறந்த விமர்சன திறனாய்வு நூல்களும் ஈழத்தில் வெளிவந்துள்ளன அவற்றில் சில நூல்களை இங்கு குறிப்பிடலாம் என எண்ணுகிறேன். (இவற்றில் சில தமிழகத்தில் பிரசுரமானாலும் ஈழத்து படைப்பாளிகளால் படைக்கப்பட்டதால் அவை ஈழத்துப் படைப்புகளாக கருதப்படும் பேராசிரியர் கைலாசபதியின், இலக்கியமும் திறனாய்வும், தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், கலாநிதி சிவதம்பியின், சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் தமிழகத்து விமர்சகர்கள் எழுதிய பல வருடங்களுக்கு முன் வந்த நூல்களான க. நா. சு வின் 'விமர்சனகலை' சிதம்பர ரகுநாதனின் 'இலக்கிய விமர்சனம் சி. சு. செல்லப்பா எழுதிய, தமிழில் இலக்கிய விமர்சனம் போன்ற புத்தகங்களை படிக்க கிடைத்திருந்தால் தூது குழுவினர் விமர்சன வழிகாட்டியாக நூல்கள் வெளிவரவில்லை என்று சொல்லமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

முடிவுரை

ஆக மொத்தத்தில் 'தூது' மூன்று இதழ்கள் மூலம் சாதித்தவை

(அ) நல்ல ஐந்து கவிதைகள் பிரசுரித்தமை

(ஆ) 'காதோரம்' என்ற பகுதியில் நல்ல செய்திகளையும் கருத்தையும் முன்வைத்தமை.

(இ) இலக்கிய இதழ் ஒன்றினை வெளியீட்டமை.

எதிர்காலத்தில் 'தூது செய்ய வேண்டியவை.

(அ) முடிந்த அளவு அதிக 'கவிதைகள்' வெளியிட வேண்டும்.

(ஆ) ஒரே அளவாக 'தூது' இதழ் அமைப்பை வெளியிடுதல்.

(இ) அடிப்படை தெளிவுடன் எந்தவொரு கருத்தையும் பரிமாற்றம் பகுதியில் வெளியிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சக் கணைகள்

எங்கள் திட்டமெல்லாம்
எங்கோ மண்ணில் புதைத்திட
உங்கள் சட்டமெல்லாம்
சங்கென முழங்கி ஆர்த்தன!

நீங்கள் நடப்பதெல்லாம்
''நெறியோ'' என்று கேட்பதற்கு
நாங்கள் நினைப்பதெல்லாம்
நடக்கா தென்று மகிழ்வீரோ!

பாடுபட்ட நெஞ்சங்கள்
பதைத்து துடித்துச் சாவதற்கு
கோடு போட்ட உங்களது
கொள்கைகள் மாயாவோ?

நேர்மையை உடைப்பதுவும்
திறமையை புதைப்பதுவும்
கூர்மையாளர் உங்களிடம்
கூடிவந்த கலைதானோ?

தட்டிப் பறிப்பதுவும்
கொட்டிக் கவிழ்ப்பதுவும்
கட்டாயம் ஒரு நாளில்
கணையாய் மாறும் காண்போமா?

★ செல்வி சித்தி ஜெரினாகரீம்
சாய்ந்தமருது - 3

---

## தாண்டவம்

என் செவியின் சுவாசம்
மரணித்து விட்டது;

வெறும் சலனத்தை
மனப் பாடமாக்கி
வாழ்வின் இலைகளை
பறிக்கும் யாசம்

இரைச்சல் காகம்
மனித மேனிகள் மீது
எச்சம் போட்டது

யந்திர சுழற்சியில்
உணர்வு நரம்புகள்
கருகி போயின

இங்கே —
'நான்' களை
தேடும் ஆன்மாக்களின்
தாண்டவம்

★ மேமன்கவி

## வழி

அரசியல்
பழிவாங்கல்
வலியவனின்
கை ஓங்கல்
நியாயத்தின்
தூக்கம்
அநியாயத்தின்
ஆக்கிரமம்
கடமையில்
குறுக்கீடு!
நிம்மதியை நாடி
ட்ரான்ஸ்பருக்கு
அலைகின்றேன்..
உறங்கிக்கிடந்த
உள்ளம்
உணர்வுபெற்று
விழிக்கிறது
எதற்கு 'ட்ரான்ஸ்பர், ?
கொசுக்களுக்குப்
பயந்தா ?
எத்தனரில்
எந்த தெருவில்
கொசு இல்லை ?
சாக்கடைக்கு
வழி வெட்டிவிட்டேன்.
இன்று
கொசு
எங்கேயிருந்து
வருகிறதென்றே
தெரியவில்லை

★ திக்குவல்லை ஸப்வான்

---

''என் படைப்புகளுக்கும் எனக்குமிடையிலான உறவு சாசுவதமான, நான் அனுபவித்த, என்னைத் தாக்கிய எல்லா அவஸ்தைகளும் கலைப்படைப்புகளாக உருவம் கொண்ட பின் நானும் என் படைப்பும் வேறு அல்லவே''

மேமன் கவி
(ஹிரோஷிமாவின் ஹீரோக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனதின் பிரதிபலிப்பு

என் மனப் பறவைக்கு
பசிக்கிறது
இதயக் கூட்டுக்குள்ளிருந்து
சுதந்திரமாய்ப்
பறக்க விடுகிறேன்
ஏகாந்த வெளியினிலே
தேடிய இரைகளை
ஏந்திக் கொண்டு
என் பறவை வருகின்றது

இல்லத்தின் கண்ணிலிருந்து
இரவின் மடியினிலே
கற்பனை இரைகளை மீட்டி
வார்த்தை உருமாற்றத்தில்
ஓ.. என் மனப்பறவை
உல்லாசிக்கின்றது

கால வேதாளத்திற்கு
அசுரடபசி
எங்கிருந்து தான் வந்ததோ..
விஞ்டிச் செல்வங்களின்
வேகமான விழுங்களில்
நிமிட ஏப்பங்கள் நீண்டு,
மணித்தியால அணுக்களின்
ஒன்றிப்பில்
நாட்சிசுக்களின்
பிரவச மரணம் தொடர்கிறது
ஓ! என் கற்பனை இரை
சீரணிக்காமலேயே
நாறிப் புழுங்குகின்றது

அப்போதெல்லாம்
காலப் பூச்சோலையில் நான்
அரும்புகின்ற விஞடி மொட்டுகளுக்காக
காத்திருந்தேன்
நிமிட மலர்களின் அழகைப்
பார்த்திருந்தேன்
மணித்தியால வண்டுகளின்
மகரந்தச் சேர்வையினல்
நாட்கனிகளின் இனிமையை
ஆறுதலாய் அனுபவித்தேன்

அன்று...
நேரம் தாழ்த்திக் காட்டிய
மணிக் கூட்டுக்கு
தண்டனையாக - அதன்
காதைத் திருகினேன்
இன்று
கால அரக்கனின்
குரத்தனம் குறைக்க..
என்ன செய்வேன்?

★ கட்டுக்கொடை மஃபீதா ஹம்ஸா

---

## ஏக்கம்

அதோ......
எட்டாத தொலைவில்
அந்த
கற்குகை
அதற்குள்
தங்கத்தை தேடுகிறேன்
என் விழிகளின்
ஒளி
கம்முகின்ற வேளை
அங்கே
ஏதோ ஒன்று
மின்னுகிறது
அது.....! என்ன?
நான் தேடும்
தங்கமா?
இல்லை!
மினுக்கிவிட்டால்
மிளிருகின்ற
பித்தளையோ?
தெரியாது!

★ தம்பிலுவில் கலை லங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வை

## சந்தம்

ஆசிரியர்: தர்ஹாநகர் ஸபா
முகவரி: பாகிஸ்தான் மன்ஸில்
தர்ஹா நகர்

❀

## சோலை

ஆசிரியர்: எம். எம். எம். நூறுல்ஹக்
முகவரி: 129, ஓஸ்மன் வீதி,
சாய்ந்தமருது-1.

❀

## தாயகம்

ஆசிரியர்: க. தணிகாசலம்
முகவரி: 15/1, மின்நிலைய வீதி
யாழ்ப்பாணம்

❀

## நிறைமதி

ஆசிரியர்: மஷ்ஹூறு ஏ. மஜீட்
முகவரி: இல 57, பிரதான வீதி.
சம்மாந்துறை-1

❀

## காற்று

ஆசிரியர்: இம்மானுவேல் புஷ்பராஜன்
முகவரி: 'ராஜ்வில்லா'
கட்டைக்காடு
கொத்தான் தீவு

❀

## இந்துமதி

ஆசிரியர்: சிவஸ்ரீ க. ஐ. யோகராசா
முகவரி: பாண்டிருப்பு-1
கல்முனை

❀

## இதய சங்கமம்

ஆசிரியர்: சந்தியோ அமிர்தராஜா
முகவரி: 'செல்வ நிதி'
புங்குடுதீவு-10

---

## சிவப்பு வார்த்தை

விடுதலை
வீரர்களிடம்
'வதை'களில் வைத்து
உண்மைகளை
கேட்காதீர்கள்
மரணசம்பத்தின்
இறுதிநேரத்தில்
சில உண்மைகளை
சொல்லுவார்கள்.
இவ்வேளை,
மேல் இடத்தில் இருந்து
''வீரமகனே
விடுதலை செய்''
என வேண்டுகோள்
வந்தாலும்
அவர்களின்
இறுதிநேர
''சிவப்பு'' வார்த்தைகள்தான்
''விவரை'' இழுக்கச் செய்யும்.

★ மருதூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தராசு நூல் விமர்சனம்

★ கலைவாதி கலீலின்

## கருவறையிலிருந்து கல்லறைக்கு...

நூல்: கருவறையிலிருந்து கல்லறைக்கு (கவிதைகள்)
ஆசிரியர்: கலைவாதி கலீல்
வெளியீடு: மன்னூர் வாசகர் வட்டம்
விலை: ரூபா 10/-

கருவறையிலிருந்து கல்லறை வரைக்குமான நிகழ்வுகளைச் சித்திரிப்பதாக இக் கவிதைநூலின் உள்ளடக்கங்கள் இருக்கும் என எதிர்பார்த்ததால் கிடைத்த ஏமாற்றம் கலைவாதியின் முன்னுரையான 'சற்றுப் பொறுங்கள்' என்பதைப் படித்ததும் கணிசமான அளவு குறைந்து விடுகிறது,

எப்போதுமே முன்னுரை எழுதுவதில் கலைவாதி Supperb ஒரு வெள்ளி ரூபாம் சிறுகதைத் தொகுதியிலுள்ள அனைத்து கதைகளை விடவும் அந் நூலின் முன்னுரைதான் பலரை மிகவும் கவர்ந்தது என்பது குறிப்பிடத் தக்கது

கருவறையிலிருந்து கல்லறைக்கு என்னும் இந் நூலிலும் 'கவிதை எழுதிக்கொண்டேயிருக்கவேண்டும், என்ற மன உறுத்தல் சதா அரித்துக்கொண்டிருக்கும் சமூக அவலங்கள், இரண்டினதும் இறுக்கமான பிணைப்பே இந்தக் கருக்கள்' என்கிறார் கலைவாதி.

வைரமுத்துவின் கவிதைகளால் புதுக் கவிதைகளின் பால் ஈர்க்கப்பட்ட கலைவாதி வைரமுத்துவின் நகல், தான் என்பதை முன்னுரையில் குறிப்பிட்டுள்ளாராயினும் வைரமுத்துவின் கவிதைகளின் நகல்களாக கலைவாதியின் கவிதைகள் இல்லை தான்.

கவிதைகளைப் பொறுத்த வரையில் பதினெட்டு நீண்ட கவிதைகளும், முப்பத்தியேழு சின்னக் கவிதைகளும் உள்ளன. சின்னக் கவிதைகளில் புருக்கள், நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும், பகல், நூல், தாய்கள் வாழ்க, வயிறு, இரக்கம், வீதிகள், பட்டினிச் சாவு ஆகியன கலைவாதியின் பெயரைக் கெடுப்பன. கலைவாதியா இவற்றை எழுதினார் என்று புருவத்தை உயர்த்த வைப்பன. இவற்றில் தமிழகத்தில் புற்றீசல்களாய் பெருகிவரும் அர்த்தமற்ற நோஞ்சான் கவிதைகளின் சாயல் தொனிக்கின்றது.

ஆயினும் ஊர்ப்பற்று, மதப்பற்று நான்கு குணம் ஆகிய தலைப்புகளில் இடம் பெற்றுள்ள கவிதைகள் யாவும் இரசித்தற்குரியன, இவற்றில் வெறுமனே ஒரு 'தேடல் சுவை' மட்டும் கிடைக்கப் பெறுகிறதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தண்ணீர் தண்ணீர்' கவிதை இதற்கொரு உதாரணம்:

மன்னார் நகர
பைப்புக் குழாய்கள்
முதலை மார்க்கோ ?
இல்லையேல்
எங்கள் குழாய்கள்
காலையும் மாலையும்
முதலைக் கண்ணீர்
வடிப்பது ஏனோம்?

சற்று நீளமான கவிதைகளைப் பார்க்கும் போது ஏ, சலீம்களே, ஓ... அந்த சிகப்பு இரவு, இஸ்ராயில் விஜயம், பார்த்துவிட்டுப் போங்கள் ஆகிய கவிதைகளில் நிச்சயம் கலை வாதி தெரிகிறார். (தொகுதி முழுவதும் இப்படியான கவிதைகள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்) இக்கவிதைகளில் கலைவாதியின் பேனா உண்மையில் அவர் சொல்வது போல சில சமயம் இறகாகவும், சில சமயம் உளியாகவும் இறங்கியிருக்கிறது.

ஒரு பலஸ்தீனச் சிறுமியின் ஹிருதயத்திலிருந்து வெளிவருவதாகச் சித்தரிக்கப்படும் ஓ அந்த சிகப்பு இரவ டாப்! இந்தக் கவிதைக்கு மட்டுமே சாகித்ய மண்டலப் பரிசு கொடுக்கலாம் கருவறையிலிருந்து கல்லறைக்கு என்ற கடைசி (தலைப்பு)க் கவிதை இதயத்தை கசக்கி பிழிகிற உணர்வை கொடுக்கிறது

... ... .. ...... ...

கருவறையை உடைத்ததே
கல்லறையில் உறங்கத்தான்
......

என்ற சொற்கள் ஒரு பெரிய உண்மையை நாலே சொற்களில் அடக்கி விட்டது.

கலைவாதி ஒரு ஓவியர் அதன் தனித்தன்மை அட்டைப் படத்தில் தொனிக்கின்றது. நூலை தன் தாய்க்கு சமர்ப்பணம் செய்த தன்மையில் கலைவாதியின் ஓவியர், ஆசிரியர், கவிஞர் சிறுகதை எழுத்தாளர் ஆகிய தன்மைகள் மறந்து போய் ஒரு யாசமுள்ள மகன்தனம்' பளிச்சிடுகிறது.

பொதுவாக நாடறிந்த கவிஞர் கவியரங்குகளில் கவிதைகளை அநாயர்சமாக முழக்கியவர், தூங்கிக் கிடந்த வானொலிக் கவியரங்குகளை உசுப்பி விட்டவர் கலைவாதி! அப்படிப் பட்டவரிடமிருந்து இப்படியொரு தொகுதியை வாசகர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டனர் பொதுவில் கூறப் போனால் வாசகர்களை கலைவாதி ஏமாற்றி விட்டார் என்பது மிகையல்ல

வெள்ளி ரூபாயின் பப்ளிசிட்டி யை கருவறை பெறுவதற்கும் இதுவே காரணமாயிருக்குமோ? இருக்கலாம் அடுத்து ஒரு நாவல் என்று கலைவாதி அறிந்துள்ளாராம் பொறுத்திருந்து பார்ப்போம் என்ன கலைவாதி? ரெடிதானே!

★ ஞானக் கண்ணன்

---

' ஒரு சரித்திர சாதனை ஒன்றைச் சொல்லட்டுமா? உலகத்தில் வேறெந்த ஆசிரியனும் செய்யாத சாதனை இது சஞ்சிகையை வெளியீடுவது மாத்திரமல்ல, அதை நாடு பூராவும் ஸ்ரேட்டு ஸ்ரேட்டாகச் சுற்றித் திரிந்து மாதாமாதம் விற்கும் ஒரே ஒரு சர்வதேச ஆசிரியனும் நான்தான் நானேதான்......,

★ டொமினிக் ஜீவா
(மல்லிகை - டிசம்பர் 1983)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தம் வெளியே வரும்!

"உங்கள் உடலுக்குள்
சிங்கள—
இரத்தம் பாய்கிறது!
உள்ளே இருந்த பன்னிருபேரும்
உரக்கக் கைகளைத் தட்டிக் கொண்டனர்

பத்திரி கைகள் பக்கந் தோறும்
தலைப்புச் செய்தி தாங்கி வந்தன!
சந்தி, மூலை— சந்திக்கும் முகங்களில்
வெசாக் பந்தல் விரிந்து கிடந்தது!
எங்கள் வீட்டில் உம்மா, வாப்பா
எல்லோரு மாகக் கூடிப் பேசினர்
"அவர்கள் நாங்கள்! நாங்கள் அவர்களே!
அவர்கள் நமக்கு அநீதி செய்யார்
எனது சமூகம் போதை ஏறி
சொர்க்க வாசலை எட்டிப்பார்த்தது!

எனது முஸ்லிம் சமூதா யம்மே!
உனது மார்பைப் பிளந்து போடு!
அதற்குள் தொங்கும் இதயத் தசையை
கிள்ளி எடுத்துக் கசக்கிப் பிழி!
நாடிக் குழாய்கள் அத்தனை யையும்
ஒவ்வொன் றாக நறுக்கி விடு!
ஈரலுக்குள்ளும் இரத்தம் உண்டு
அதையும் பிய்த்துக் கூறு போடு!
அந்நிய ரத்தம் உனது உடலுள்
அங்கம் அங்கமாய் ஓடுவ தாமோ?
உனது கையால் உனக்கு நீயே
மரண தண்டனை விதித்துக் கொள்க!

இலையேல்?
இலையேல் நடப்பதை இருந்ததே நீபார்!
என்று மிலாத ஆனந்தம் உனக்கு
இப்போது வந்ததன் காரணம் என்ன?
"சிங்கள ரத்தம் ஓடுவ தாலோ?"
இல்லையேல் நடப்பதை இருந்தே நீபார்!

உனது உரிமை! உனது வீடு!
உனது சொத்து! உனது பொருட்கள்!
உன்னிட மேதான் இருக்க வேண்டும்
என்னும் விதிக்கே எதிராய் நடப்போர்
தங்கள் உரிமை உனது உடலுள்
தங்கி இருக்க விடுவ ராமோ?

★ எச் ஏ. அஸீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் படைத்தான்?

கண்டி நகரத்
தெப்பக் குளத்துக்
கல் கட்டில்
அமர்ந்திருக்கிறேன்
காற்று வந்து
தென்றலாய் என்னைத்
தாலட்டித்
தழுவிச் செல்கிறது.
அழகிய நீரின்
அசைவில் லயிக்கிறேன்
பசுமை மரங்கள்
என்னையும் உசுப்புகின்றன
உயர்ந்த மலைகள்
மனதை ஈர்க்கின்றன
சிறகடிக்கும் பறவைகள்
சிந்தனையை விரட்டுகின்றன
மேல் வானம்
கதை சொல்கிறது
இறைவன் என்னையும்
தென்றல் காற்ருய்
அழகிய நீராய்
பசுமை மரமாய்
உயர்ந்த மலையாய்
சிறகடிக்கும் பறவையாய்
மேல் வானமாய்
படைத்திருக்கலாம்
மனிதனுய் படைத்து
வேடிக்கை பார்க்கிருன்
கவலைச் சுமைகள்
கனக்கிறது என்னுள்
யோசனைத் தலையிடிகள்
தாக்குகின்றன என்னை
அடுத்தவருக்குக்
குறுக்கீடாய் நிற்கிறேன்
இயற்கையினுள் என்னையும்
இணைத்திருக்கலாம்
ரசனை ஒன்ருயாலும்
இருந்திருக்கும்
இறைவன்
என்னையே கேட்காது
ஏன் படைத்தான் என்னை

★ அறநிலா
தும்பறை வளாகம்.

---


# இதயத்து அஞ்சலிகள்!



கடந்த 83 ஜுலை கலவரத்தில் "காணுமல போன" அப்பாவி மக்களுக்கும் கலை இலக்கிய இதயங்களுக்கும், சமீபத்தில் பரம பதமடைந்த "கவிஞர் ஈழவாணன்" அவர்கட்கும் எமது இதயத்து அஞ்சலிகள் என்றும் உரித்துடையன.

புதுமை கலை இலக்கிய வட்டத்தினர்
கல்முனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாமரப் பா

## காலத்தால் அழியாத கிராமியக் கவித் தூதுகள்

நாட்டார் கவிதைகளில் நயமிக்க சில பாடல்களால் ஒரு திருமண வாழ்வு இங்கு சித்தரிக்கப்படுகிறது. படிப்பறிவற்ற பாமரர்களாயினும் அம் மக்களின் கவிநயமும் உவமை அழகும் இரணிக்கத் தக்கன என்பது டன் வியப்பூட்டவும் கூடியனவே!

**1 மாப்பிள்ளை (மச்சான்)**

அக்கரைப் பற்றோ
அவரும் கரவாகூரோ
சாய்ந்தமருதூரில்
சாதி சனம் உண்டாமோ?

கரைவாகுதான் ஊரோ - நல்ல
கவியும் படிப்பாராமோ
முறையும் மச்சானுமோ - அந்த
மாப்பிள்ளை வடிவுதானோ?

**2 பெண் (மச்சி)**

மாமி மகளே என்ர
மருதங்கிளி வங்கிசமே
ஏலங்கிராம்பே - உன்னை
என்ன சொல்லி கூப்பிடட்டும்?

சீனத்துச் செப்பே - என்ர
சிங்காரப் பூ நிலவே
வானத்தைப் பார்த்து - மச்சி
வாடுவது என்னத்திற்கோ

**3 காதல்**

காவற் பரணிற்
கண்ணுறங்கும் வேளையிலே
கண்ணுண மச்சி வந்தென்
காலுன்றக் கண்டேன்

நித்திரைக் கண்ணிலேயும்
நினைவிலேயும் தானுறது
கலிமா விரலும் - மச்சான்
கல்பதித்த மோதிரமும்

**4 திருமணம்**

கைவிடுவேன் என்று எண்ணி
கவலைப்படாதே கண்ணூர்
அல்லாமேல் ஆணை , உன்னை
அடையாட்டி காட்டுப் பள்ளி
கண்டுக் கிளிக்கு
கலியாணம் எண்டு சொல்லி
குண்டு மணி தேடி நான்
குந்தாத பத்தையில்லை

**5 சல்லாபம்**

ஆல மரமுறங்க
அடிமரத்தில் வண்டுறங்க
உன்மடியில் நானுறங்க
என்ன வரம் பெற்றேனடி

காசி தரட்டோ மச்சி
கதைத்திருக்க நான் வரட்டோ
தூது வரக் காட்டிடட்டோ-இப்போ
சொல் கிளியே உன் சம்மதத்தை

**6 ஏக்கம்**

மாலை விளக்கெரிய
மணவாளன் சோறுதின்னப்
பாலன் விளையாட - ஒரு
பாக்கியம் தா ஆண்டவனே

ஓதக் 'குர்ஆனி'ருக்க
'ஒழு' வெடுக்கச் செம்பிருக்க
வேதமும் இங்கிருக்க
வேறு 'ஹறும்' இன்னலாமோ?

**7 பிரிவு**

சாந்தார்க்குச் சந்தனமே
சாதி மரிக் கொழுந்தே - ஒன்னை
வெறுத்திட்டுப் போறமுனு
வேலை விட்டு வந்திடாதே

மதுரைச் சரவிளக்கே
நான் படிக்கும் பொஸ்தகமே
பூனக வாசகரே - நீங்க
போக மனம் வந்த தென்ன?

✶ முகம்மது அலிக்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ மடல் விடு தூது ★

**● கடையாணி கழன்ற**

தூதின் அடக்கங்களில் பெரும் பாலானவை கடையாணி கழன்ற உணர்வுகளாகவே இருக்கின்றன. அத்தோடு தூது இப்படிச் சிறுத்துக் கொண்டே போனால் அடுத்த தூது 'பஸ்டிக்கட்' டின் பின்புறம் வந்தா லும் வரும் போல

-நற்பட்டிமுனை ஷரீல்
கல்முனை

**● வேறு வேலை ஏதும் ?**

உங்களுக்கு வேறு வேலை ஏதும் கிடையாதா? கவிதைகளின் மானத்தை காற்றிலே பறக்க (தூது) விடும் உங்களைப் போன்றோரை இலக்கிய வீதியில் வைத்து எழுத் துக் குண்டுகளால் சுட வேண்டும்.

பொன். சபாரத்தினம்
யாழ்நகர்

**● ஒரு ரூபாயா ?**

எங்கள் ஊரில் புதுக்கவிதை இரசி கர்கள் அவ்வளவாக இல்லை இருக்கி றவர்களும் இச் சிற்றேட்டுக்கு ஒரு ரூபாயா என வியக்கிறார்கள்.

குறைஷா மொஹிடீன்
கம்பளை

**● துண்டுத்தாள் இலக்கியம்!**

தூது ஆசிரியருக்கு ஒரு வேண்டு கோள் தூது இப்படி கஷ்ட ஜீவனத் துக்குள்ளாக வேண்டாம். துண்டுப் பேப்பர்களில் இலக்கியம் (முக்கிய மாக கவிதை) அடித்து விற்பனை செய்தல் ஒரு நல்ல இலக்கிய முயற்சி ஆகா

வே ராசரட்ணம்
கிளிநொச்சி

**● ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!**

கவிதைகள் என்ற பெயரால் வசனங்களை வெட்டி முறிப்பது... அவற்றை அச்சடிப்பது விற்பது இனிய மரபுக் கவிதைகளுக்கு ஏச வேண்டியது ஏ...தமிழே உன்னை இனி ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!

செ. நடேசபிள்ளை
ஊறணி

**● காதோரமா அது?**

முதலாவது தூதில் காதோரம் என்ற பகுதியில் இலக்கிய வம்பளக் கும் எம் ஆர் சுமன் யார்? தேவையற்ற இந்தக் காதோரம் பகுதியை பார்க்கும் போது அதை எழுதியவரின் கண்களை பிருண்டி விடலாம் போல ஒரு ஆத்திரம் வந்தாலும்

அமீர்ஹுசைன்
நிந்தவூர்

**● தொடர்க !**

தொடரட்டும் தூது செ(ா)ல்லும் சேதி படரட்டும் பாவலர்கள் கவி ஒதி!

கலையன் ரபீக்
கொழும்பு

**● நிறுத்தி விடு!**

தூதும் கவியும் மண்ணாங்கட்டி யும் உடனே நிறுத்திவிட்டு சும்மா இருக்கவும் அடச்சீ...'

... ...

சாய்ந்தமருது
(பெயர் விளங்கவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை வாழ விடு!

ஓ!
என் அன்பே!
உன் கள்ளமில்லாத
தூய அன்பை
எடுத்துரைக்க
எனக்கு
வார்த்தைகளேயில்லை;

உனது
புனிதமான இதயக்குடிசையில்
குடியிருக்க
நான் கொடுத்து வைக்கவில்லை
இந்த நிலையில்;
உனக்கு
எப்படி ஆறுதல் சொல்லலாமோ?
தெரியவில்லை

நீ!
முன் கூட்டியே
என்னிடம் கேட்டிருக்க கூடாதா?
கள்ளமில்லாமல்
பழகுகின்றாய் என்றுதான்
நினைத்திருந்தேன்
இப்போதுதான் புரிகின்றது

நான்;
ஏற்கனவே
ஒரு தேவதையிடம்
என்னியத்தை கொடுத்து விட்டேன்
அவள்
இரவு பகலாக
என்னிதயத்தைப்
பூஜித்து வருகிறாள்
ஆதலால்

நான்
அவளுக்கு கொடுக்கின்ற
வரங்களை
நிறுத்த மாட்டேன்
என்றாலும்

உன் அன்பையும்
நான் மறவேன்!

இதனிடையில்
கோவலன் காலத்து
மாதவி போல்
வாழ நினைக்காதே!
என்னிதயச் சுவர்களிலே
என்
தேவதையின் போட்டோக்களை
தொங்க விட்டிருக்கின்றேன்;
மேற் கொண்டு
போட்டோ தொங்கவிட
இடமேயில்லை
உன்
அன்பு நிலையானது
நான் என்ன செய்வேன்

நீ
எங்கிருந்தாலும்
உன்னை
என்னிதயம் வாழ்த்தும்
வாழ்த்திக் கொண்டேயிருக்கும்
வேண்டு மென்றால்
மறு ஜென்மத்தில்
உன் கனவு பலிக்கட்டும்
அது வரையிலும்
என்னை வாழ விடு

★ பாண்டிருப்பு கே. நாகராஜா

---

...' எமது நாட்டுப் புதுக்கவிதையாளர்களாலேயே புதுக்கவிதை இலக்கியம் செத்துவிடும் போலிருக்கிறது. புதுக்கவிதையை மரபுக் கவிஞர்களிடமிருந்தல்ல, புதுக் கவிஞர்களிடமிருந்தே காப்பாற்ற வேண்டியிருக்கிறது'

கலைவாதி கலீல்
(கருவறையிலிருந்து கல்லறைக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தம் வராத ஒரு வாழை மரம்

எங்க வீட்டு கிணற்றடியில் நிற்கின்ற
வாழை மரம் ஒன்று
வயசுக்கு வந்து
திங்களோடு திங்கள் எட்டாய்
செவ்வாய் ஒன்பதாய்
புதன் பத்தாய் போனதுதான்
மிச்சம்
இன்னும் அதற்கு
'இசாக்' காலம் வரவில்லை!

சுவாதம் பிடித்த இலைகளோடும்
சூம்பிப்போன நெட்டியோடும்
சும்மா நின்டு நெடுவலாய் வளர்ந்து
நிற்கும் அந்த
வாழை மரத்தை பார்க்கும் போது
வயிறே எரியும்

ஒரு குலை ஈன்று தந்தால்
உள்ளம் குளிரும் என்பதற்காக
எத்தனை மருந்துகள் நானும் அதற்கு
செய்து பார்த்தேன்
எத்தனை பள்ளித் தலங்களில் ஏறி
நேர்த்திகள் வைத்தேன்

'உரியாணேடு' நிலாவொளியில் நின்று
உலக்கையாலே குத்திய நாட்கள்
எத்தனை அதற்கு

ஒன்றும் ஒத்து வருவாய்
இல்லை

குட்டிகள் வெடித்து
குலைகள் போட்டு
வாழ்க்கை நடத்த முடியா
அந்த
வாழை மரத்தை என்ன செய்வது?
வெட்டியும் எறிவது பாவம்
வெள்ளன எழும்பி
விழிப்பது அதனின் முகத்தில்
அதனால்
வேதனை நெஞ்சில்!

★ கல்முனை ஆதம்

---

## நெருப்பு!

வானிலே சுடர் நெருப்பு!
வாழ்விலே துயர் நெருப்பு!
மானிலம் வாழும் ஏழை
வயிற்றிலோ பசி நெருப்பு

பொய்மையோர் பொறி நெருப்பு
பொய்மைமுன் மெய் நெருப்பு
ஐயகோ அடிமை வாழ்வோ!
அளவிலாப் பெரு நெருப்பு

முதுமையோர் முழு நெருப்பு!
மூர்க்கரோ கொடு நெருப்பு
புதுமைகள் காணு வாழ்வும்
பொய்யிலே பொறி நெருப்பு!

பாசமும் ஒரு நெருப்பு!
பட்சமும் ஒரு நெருப்பு
மோசமாம் மனித வாழ்வை
முடிப்பதும் சிதை நெருப்பே!

வறுமையோ... கொடு நெருப்பு!
வாட்டிடும் மன நெருப்பு!
பெருந்துயர் தீர எங்கும்
பெய்கவே; மழை நெருப்பு!

★ நிலா தமிழின்தாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதோரம்

இலக்கணக் கவிதை என்னும் மரபுக் கவிதை தமிழனின் பாரம் பரிய மிக்க சொத்து இன்று தோன்றி நாளை மறைந்து விடும் மின்மினிப் பூச்சிகளைப் போல அல்லாமல் நிரந்தரமான பல நட்சத்திர மரபுக் கவிதைகள் தமிழ் இலக்கிய வானை என்றும் அலங்கரித்து வருகின்றன.

ஈடுஇணை சொல்லமுடியாத பல அரிய கருத்து பெட்டகங்கள் மரபுக் கவிதை வடிவிலேயே பாதுகாக்கப்பட்டு வருகின்றன தமிழ் மொழியின் கவிதை வளம் தமிழ் மொழியைப் பயிலும் ஒவ்வொருவரையும் பெருமிதப்படுத்தக் கூடிய தொன்றுகும் அத்தகைய பெருமை வாய்ந்த இலக்கண கவிதைகள் இன்று ஓரளவு அருகி வருகின்றதைக் காணக்கூடியதாயுள்ளது.

புதிதாகத் தோன்றிய அருமையான மரபுக் கவிதைகள் இன்று எங்குபோய் ஒழிந்து கொண்டன நவீன இலக்கிய சாம்ராஜ்ஜியத்தின் அந்தப் புரத்தில் மரபுக் கவிதைகள் என்ற ரூப சுந்தரிகளை கோஷாத் துணி கொண்டு போர்த்தி மூடியது யார்? நல்ல மரபுக் கவிதை எழுத நிறைந்த பயிற்சி வேண்டும் கடின உழைப்பு வேண்டும் அத்தகைய உழைப்பையும் பயிற்சியையும் மேற்கொள்ள யாரும் இப்போது தயாராகவுமில்லை பொறுமையுடனுமில்லை.

கவியரங்குகளில் முன்பு மரபுக் கவிதைகள் மட்டுமே வாசிக்கப்பட்டு வந்தன இப்போது கவியரங்குகளில் நகைச் சுவைத் துணுக்குகளைக் கூட புதுக்கவிதை என்ற போர்வையிலும் ஒருவரையொருவர் தாக்கி வம்புக் கிழுக்கின்ற சில வசனங்களையும் கவிதைகள் என்று பாடுகின்றனர் ஆளையாள் தாக்குவதற்கு இலக்கிய காரர்கள் கவியரங்குகளைத்தான் பயன்படுத்த வேண்டுமா...? வளர்ந்து விட்ட கவிஞர்கள் வளர்கின்றவர்களுக்கு கைகொடுக்கத்தான் வேண்டுமே தவிர வசைமாரி பொழிந்து துரத்திவிடக் கூடாது மேலும் கவியரங்குகளில் மரபுக் கவிதைகளையே கேட்டுப்பழகிய எம் காதுகளுக்கு வசதியாக ஒரு போலிப் போர்வை போர்த்தப்பட்டு புதுக்கவிதைகளே ராகத்தோடு படிக்கப்படுகிறது.

எனினும் விஞ்ஞானம் நிறைந்த நவீன யுகத்தில் சில விடயங்களை தெளிவான தமிழில் எல்லோருக்கும் புரியக்கூடியதாக புதுக்கவிதையிலேயே சொல்ல வேண்டும். சில விஷயங்களை மரபுக்கவிதையில் மட்டுமே சொல்ல முடியும்.

புதுக்கவிதையை ஆதரிக்கும் (வார்த்தையால்) சில கவிஞர்கள் ஏனோ புதுக்கவிதைகள் புனைவதில்லை ஏன் தாமும் புதுக்கவிதை பட்டியலில் சேர்ந்துவிடுவோம் என்ற பயமா? ஆதங்கமா வார்த்தைகளால் அலசுவதை விட இவர்கள் சும்மா இருந்து மரபுக் கவிதைகளையே படைக்கலாம்.

புதுக்கவிதை மரபுக்கவிதை இரண்டிலும் வாசகர்கள் எந்தளவிருக்கிறார்கள்? புதுக்கவிதையை விரும்பிப் படிப்பவர்கள் 100% இருந்தால் அந்த மரபுக் கவிதையைப் படிக்க 50% மானோரே இருப்பர் எளிய தமிழின் எண்ணக்குவியல்களே புதுக் கவிதை இறுகிய தமிழின் வண்ணக் கலவையே மரபுக் கவி, கிராமத்து வாசகர்கள் பிறரின் உதவியோடே விளங்கிக்கொள்ளவேண்டியது மரபுக் கவிதையாயிருக்கின்றது.

எனினும் இரண்டு கவிதைகளிலும் சொல்லக்கூடிய விடயங்களும் உண்டு ஆனால் அவற்றில் சிறப்பாக எதில் சொல்லலாம் என்பதே இங்கு முக்கியம். இதனையே கவிச் சுவைஞர்களும் நமது இலக்கிய காரர்களும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

★ எம். ஆர். குமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ, வேண்டுமெனக்கு

பார் முழுக்க
உனைத் தேடி
வேர் இழந்த
மரம் போல்,
சாறு எடுத்த
கனி போல்,
நீர் இன்றித் தவிக்கும்
மீன் போல்,
நீரில்லாமல் நான்
தனியாய் தவிக்கின்றேன்
சோர்வடைந்த
என் தேகம்
உயிர் துறக்குமுன்
பயிர் செழிக்க - நீர்
உதவுமாப் போல்
நானுயிர் வாழ
நீ வேண்டுமெனக்கு

-காத்தான்குடி
★ இக்பால்கான்

## விலைவாசியே!

ஓ விலைவாசியே!
நீ பொருட்கள்மேல்
கட்டுப் பாட்டை
விதிக்கும் வரை
பொருட்களும்
எங்கள் கண்களிலிருந்து
ஓடி ஒழிவதிலிருந்தும் -
உன்னுடைய கட்டுப்பாடு
இல்லாத பொழுதிலே
பொருட்கள்
தட்டுப்பாடு இல்லாது
உலவுவதிலிருந்தும் -
பொருட்கள்
உனது கட்டுப்பாட்டை
விரும்பவில்லை என்பதனை -
பொருட்கள்
சுதந்திரப்பிரியர் என்பதனை
நீ அறியாயா ?

★ - முருகு -

## நீதியின் மௌனம்

அன்று
பசிக்களை போக்க
பரத்தையானதால்
காவல் பருந்துகளால்
சட்டத் தளபதிமுன்
நிறுத்தப் பட்டதன்
பிரதி பலன்
நாங்களின்று
தண்டனைச்சிறையில்
இடப்பட்டு
சிறகொடிக்கப்பட்ட
பறவைகளானோம்
ஆனால்
சிறையில் சேர்ப்பித்து
போலிப் புகழ் வரித்த
காவல் பருந்துகளும்
எங்களையே தீண்டி
உடற்பசி தீர்க்கின்றன
அங்கு
வயிற்றுப் பசி
பூஜ்யமே!
காவல் வேஷமிட்ட
கள்ளப் பருந்துகளை
எங்களால்
சட்டத்தளபதிமுன்
நிறுத்த முடியவில்லை
ஓ ...
நாங்கள்
ஊமையாக்கப்பட்ட
மௌனப் பூச்சிகள்.

★ மருதூர் ஜமால்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமாற்றம்

காலத்தை வெல்லும் படைப்புகளில் சமகால எழுத்தாளர்கள் தம் கவனத்தைச் செலுத்துதல் வேண்டும் மீண்டும் மீண்டும் செல்லரித்துப் போன பழைய கருக்களையே புதிய யுத்திகளில் வெளியிடுதல் ஆரோக்கியமான இலக்கிய முயற்சிகளுக்கு வழி சமைக்காது.

சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் படைப்புக்கள் எதிர்காலத்தில் நிச்சயம் வாழ்த்தப் பெறும் சுதந்திரத்திற்கு முன் பாரதி சுதந்திரம் கண்டு விட்டதாய்ப் பாடினான் சுதந்திரப் போராட்டக் காலத்தில் அதைக்களமாக்கிப் பாடியதால் பாரதியின் சுதந்திரக் கவிதைகள் காலத்தை வென்றும் வாழ்கின்றன.

இவ்வாறே சமகாலப் பிரச்சினைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அந்நிகழ்வுகளைச் சித்தரிக்கின்ற படைப்புகளை படைத்து வரும் படைப்பாளிகளைத்தாம் இறவாப்புகழ் தேடி வருகிறது.

சில சமகாலப் படைப்பாளிகளிடத்தே இவ்வகை எண்ணம் இருக்கின்ற போதிலும் (ஒருசிலரைத்தவிர) எழுத ஆரம்பிப்பதில்லை காரணம் நமக்குப் புரியக் கூடியதுதான்! இறந்த காலங்களில், கவிதைகளுக்காக சிறைக்கூடங்களை 'எட்டிப்பார்த்த' செம்மல்கவிஞர்களின் கவிதைகளின் தடத்தில் இன்றைய குறிப்பிட்ட சில இளைய தலைமுறையினரின் படைப்புக்கள் நகர்ந்து வருவதை சில பொறுமைக்கண்களால் காணமுடியாவிடினும் அது உண்மையே! அவ்வாறுனோரின் படைப்புக்கள் எதிர்காலச் சந்ததிகளால் மதிக்கப்படுமென்கிற தீர்க்க தரிசனத்தை இப்போதே சொல்லிவைப்போம்.

அத்துடன் இன்னும் 'புதிய மொந்தையில் பழைய கள்ளை' யே தந்து கொண்டிருப்பவர்களை எதிர்கால இலக்கிய உலகம் கவனத்திற்குக் கூட எடுக்காது என்பதையும் கூறி வைப்போம் இன்னும் நமது பேனுக்கள் பேனுக்கூரிகளை அல்ல சுதந்திரமுள்ளைப் பொருத்திக் கொண்டு எழுதட்டும். வெறும் மையை அல்ல நிகழ்வுகளைத் தொட்டுக் கொண்டு எழுதட்டும்.

இவற்றினால்தான் பாரதியின்
சிங்களத் தீவினுக்கோர் பாலமைப்போம் ... , என்பதன் சரியான கருத்தை (நமதளவில்) புரிந்து கொள்ளுவதுடன் தற்போதைய பிரச்சினைகளை இலக்கியத்தில் மட்டுமன்றி அரசியலிலும் தீர்த்துக் கொள்ளலாம் என்பதுவும் சாத்தியமானதொன்றே!

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூது-4,5

'இலக்கியத்தூதே
இலட்சியத்தூது'

★ மே - ஆகஸ்ட் 1984

ஆசிரியர்:

❁ ஆர். எம். நௌஸாத்

நிர்வாக ஆசிரியர்:

❁ எஸ். எம். எம். ருபீக்

அலுவல்கள்:

503, பிரதான வீதி,
சாய்ந்தமருது-1

வெளியீடு:

கல்முனை புதுமை
கலை இலக்கிய வட்டம்

Office:

5 3, Main Road,
Sainthamaruthu - 01

************************

இக்கவியேட்டில் இடம்பெற்றுள்ள படைப்புக்கள் அனைத்திற்கும் அவற்றைப் படைத்தவர்களே பொறுப்பாவர்.

வெளியிடுபவர்: கல்முனை அபூ

அச்சகம்: மெடேண்-கல்முனை

************************

## சுதந்திர உதயம்!

நண்பர்களே .....?
காத்திருங்கள்
சுதந்திரப் பிரச்சினை
உண்மையை உணர்த்தும்
மெதுவாக
உண்மைக் கொள்கைகளை
நிர்ணயிக்கும் காலம்
உதயமாக வில்லை
விலங்குகள்
உடைக்கப்படுகின்ற
வரையில் காத்திருங்கள்
இறந்து போனவனுக்கு
பதிலாக
உயிருடன் இருப்பவனைக்
காத்திடவாவது காத்திருங்கள்
சுதந்திரம் கிடைக்க
பொறுமையுடன் இரு
அதன் பிறகு
உங்கள் உண்மைக்
கொள்கைகளை வரையலாம்
அதுவரையாவது நண்பர்களே
பொறுமையுடனே
காத்திருங்கள்

★ மருதூர்க் கனி

---

## மழலை

கண்ணில் தெரியும்
கனிந்த பார்வை
வதனத்தில் தெரியும்
புன்சிரிப்பு
தாளம் போடும்
கால்கள்
மழலை மொழி பேசி
சிதமிசைத்து
மனதிலுள்ள
மனக் கவலையை
தீர்த்திடும்
கண்ணே - நீ
என் வாழ்வில்
துன்பத்தை
எதிர்த்து
இன்ப மேற்றிடும்
மழலையடா - நீ.

★ செல்வி நசீரா அன்சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

General Merchants Wholesale & Retail
Tours & Travel Agency, Transport Agency
Authorised Dealers, Sales Rep.

# KAMIL'S TRADE CENTRE

**(POTTUVIL MARKET)**

P. O. Pox: 1
Main Street,
POTTUVIL.

T'Phone: *067 - 7383*
Telex: *21494* GLOBAL CE
(ATTN: KHALEEJ)
Cable: ALKHALEEJ POTTUVIL

---

*With best compliments from*

GENERAL MERCHANTS WHOLESALE AND RETAIL
TOURS AND TRAVEL AGENCY, TRANSPORT AGENCY
AUTHORISED DEALERS SALES REP.

# KHALEEJ TRADERS

P. O. Box: 01
Main Street,
POTTUVIL.
Sri Lanka

T. Phone: *067 - 7373*
Telex: *21494*
GLOBAL CE (ATTN: KHALEFJ)
Cable: AL·KHALEEJ, POTTUVIL.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் திறப்பு விழாவும், அகில உலக இஸ்லாமிய மாநாடும்!

பொத்துவில் அல்-ஹலீஜ் அரபுக் கலாசாலை
திறப்பு விழாவை முன்னிட்டு
மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் இடம்பெறும்.

காலம்: 20-04-1984 — 21-04-1984

இடம்; கலாசாலை மைதானம் பொத்துவில்

உள்நாட்டு, வெளிநாட்டு இஸ்லாமிய பிரமுகர்களுடன் நமது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களும், கௌரவ பிரதமர் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் கலந்து கொள்வர்.

ஆத்மீக, தொழில்நுட்ப கல்விகள் போதிக்கப்படும்.

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

## அல் - ஹலீஜ் அரபுக் கலாசாலை

(அநாதை இல்லம், இஸ்லாமிய நிலையம்)
பெரிய பள்ளிவாசல் வீதி,
பொத்துவில்.

கல்முனை மொடேன் அச்சகத்தில் அச்சிட்டு,
கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org